ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/57 - 2018 මැයි මස 16 වැනි බදාදා - 2018.05.16

2071/57 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்

பிரிவு 48 (1) இன் கீழான கட்டளை

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க ஆகிய நான், இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையின் மீது, இதற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மற்றும் இதற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட சேவைகள் என்பன முறையே சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சேவைகள் என்பனவாக உள்ளன என இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

ஜோன் அமரதுங்க,
சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, மே 09.

**அட்டவணை**

**பாகம் I**

**சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சிகள்**

1. ஹோட்டல்கள்
2. விருந்தினர் மனைகள்
3. தங்குமனை அலகுகள்
4. சுற்றுலாப்பயணி பங்களாக்கள், பாரம்பரிய பங்களாக்கள் மற்றும் பாரம்பரிய மனைகள்
5. சுற்றுலாப்பயணி வாடகை தொடர்மாடி
6. தொடர்மாடி ஹோட்டல்கள்

1A - G 27664 - 17 (2018/05)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7. சிறிய சொகுசு ஹோட்டல்கள் (கடை ஹோட்டல்கள் / கடை தோட்ட வீடுகள்)
8. ஆயுர்வேத ஹோட்டல்கள்
9. பாரம்பரிய ஹோட்டல்கள்
10. சுயாதீன சுற்றுலாப்பயணி சிற்றுண்டிச்சாலை
11. சுற்றுலாப்பயணி கடைகள்

**பாகம் II**

**சுற்றுலாப் பயணிகள் சேவைகள்**

1. சுற்றுலாப்பயணி முகாமைக் கம்பனிகள்
2. ஆயுர்வேத சுற்றுலாப்பயணி சுகாதார கவனிப்பு நிலையங்கள்
3. சுற்றுலாப்பயணி வழிகாட்டி சேவைகள்
4. சுற்றுலாப்பயணி களத் தொழிற்பாடுகள்
5. வாசனைத் திரவிய தோட்டங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள்
6. நீரை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள்
7. ஸ்பா மற்றும் வெல்நெஸ் நிலையங்கள்
8. வாகன வனப்பயண சுற்றுலா தொழிற்படுத்துநர்கள்
9. யானை மீது பயணம் செய்யும் சுற்றுலா தொழிற்படுத்துநர்கள்

6 - 151/1

---

ச.வ.பீ. 3/2012

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

பிரிவு 48 (5) இன் கீழான கட்டளை

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 48 (5) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க ஆகிய நான், இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையின் மீது, இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட சுற்றுலாப் பயணத்துறை தொழில்முயற்சி ஒன்றின் அல்லது சுற்றுலாப் பயணத்துறை சேவை ஒன்றின் உரிமம் மற்றும் பதிவுக்கான அல்லது அத்தகைய சுற்றுலாப் பயணத்துறை தொழில்முயற்சி ஒன்றின் அல்லது சுற்றுலாப் பயணத்துறை சேவை ஒன்றின் அத்தகைய உரிமத்தை புதுப்பித்தலுக்கான விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் உரிமம், சுற்றுலாப் பயணத்துறை தொழில்முயற்சி மற்றும் சுற்றுலாப்பயணத்துறை சேவை என்பவற்றைப் பதிவுசெய்தல் மற்றும் அத்தகைய உரிமத்தைப் புதுப்பித்தல் தொடர்பில் அட்டவணையின் நேரொத்த நிரல்களில் குறித்துரைக்கப்பட்ட உரிய கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும் என்று இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

ஜோன் அமரதுங்க,
சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, மே 09.

## அட்டவணை

| இல. | நிரல் I | | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|---|---|
| | சுற்றுலாப் பயணத்துறை தொழில் முயற்சி | | பதிவுக் கட்டணம் | உரிமம் அளித்தல் கட்டணம் | புதுப்பித்தல் கட்டணம் |
| 1. | ஹோட்டல்கள் | 25 அறைகள் அல்லது குறைவாக | 24000 | 12000 | 12000 |
| | | 26 அறைகள் - 50 அறைகள் | 24000 | 18000 | 18000 |
| | | 51 அறைகள் அல்லது அதற்கு மேற்பட்டவை | 24000 | 24000 | 24000 |
| 2. | விருந்தினர் விடுதிகள் | தரம் A - அறைகள் 1-10 | 12000 | 6000 | 6000 |
| | | தரம் A - அறைகள் 11 அல்லது அதற்கு மேற்பட்டவை | 12000 | 9000 | 9000 |
| | | தரம் B - அறைகள் 1-10 | 12000 | 4800 | 4800 |
| | | தரம் B - அறைகள் 11 அல்லது அதற்கு மேற்பட்டவை | 12000 | 6000 | 6000 |
| | | தரம் C - அறைகள் 1-10 | 12000 | 3600 | 3600 |
| | | தரம் C - அறைகள் 11 அல்லது அதற்கு மேற்பட்டவை | 12000 | 4800 | 4800 |
| 3. | தங்குமனை அலகுகள் | | 2000 | 5000 | 5000 |
| 4. | சுற்றுலாப்பயணி பங்களாக்கள், வாடகை வீடுகள் பாரம்பரிய பங்களாக்கள், பாரம்பரிய வீடுகள் | | 5000 | 5000 | 5000 |
| 5. | சுற்றுலாப்பயணி வாடகை தொடர்மாடிகள் | | 20000 | 10000 | 10000 |
| 6. | தொடர்மாடி ஹோட்டல்கள் | | 40000 | 30000 | 30000 |
| 7. | சிறிய சொகுசு ஹோட்டல்கள் (கடை ஹோட்டல்கள் கடை தோட்ட வீடுகள்) | 25 அறைகள் அல்லது குறைவாக | 24000 | 12000 | 12000 |
| | | 26 அறைகள் - 50 அறைகள் | 24000 | 18000 | 18000 |
| | | 51 அறைகள் அல்லது அதற்கு மேற்பட்டவை | 24000 | 24000 | 24000 |
| 8. | ஆயுர்வேத ஹோட்டல்கள் | | 30000 | 20000 | 20000 |
| 9. | பாரம்பரிய ஹோட்டல்கள் | | 30000 | 20000 | 20000 |
| 10. | சுயாதீன சுற்றுலாப் பயணி சிற்றுண்டிச்சாலைகள் | சிறப்பு | 24000 | 9000 | 9000 |
| | | ஏனையவை | 12000 | 6000 | 6000 |
| 11. | சுற்றுலாப்பயணி கடைகள் | மாணிக்கம் மற்றும் ஆபரணம் | 24000 | 9000 | 9000 |
| | | ஏனைய வகைகள் | 12000 | 6000 | 6000 |

| இல. | சுற்றுலாப் பயணத்துறை சேவைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சுற்றுலாப்பயணி முகாமைக் கம்பெனிகள் | இலக்கு முகாமை கம்பெனிகள் | 24000 | 9000 | 9000 |
| | | தொடரினை சுற்றுலா தொழிற்பாடுகள் | 20000 | 10000 | 10000 |
| | | வெளிவாரி சுற்றுலா தொழிற்பாடுகள் ஆபரேட்டர்கள் | 10000 | 5000 | 5000 |
| | | சுற்றுலாப்பயணி நிகழ்வு முகாமை கம்பெனிகள் | 40000 | 20000 | 20000 |
| 2. | ஆயுர்வேத சுற்றுலாப்பயணி சுகாதார கவனிப்பு நிலையங்கள் | | 30000 | 20000 | 20000 |
| 3. | சுற்றுலாப்பயணி வழிகாட்டி சேவைகள் | தேசிய | 6000 | 3600 | 3600 |
| | | ஓட்டுநர் | 6000 | 3600 | 3600 |
| | | பிரதேசம் | 3600 | 2400 | 2400 |
| | | இன்பக்குழுப் பயணம் | 3600 | 2400 | 2400 |
| | | தளம் | 3600 | 2400 | 2400 |
| 4. | சுற்றுலாப்பயணிகள் களத் தொழிற்பாடுகள் | | 30000 | 20000 | 20000 |
| 5. | வாசனைத் திரவிய தோட்டங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் | | 12000 | 6000 | 6000 |
| 6. | நீரை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் | நீர் விளையாட்டு நிலையங்கள் | 24000 | 6000 | 6000 |
| 7. | ஸ்பா மற்றும் வெல்னஸ் நிலையங்கள் | | 24000 | 9000 | 9000 |
| 8. | வாகன வனப்பயண தொழிற்பாடுகள் | | 10000 | 5000 | 5000 |
| 9. | யானை மீது பயணம் தொழிற்பாடுகள் | | 5000 | 3000 | 3000 |

6 - 151/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.